**அ.வ.எண்.363/2022**
**பி.வா.சா.1 : கவிதா**
**தேதி : 12.03.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

கரூர் டவுன், 7 காவேரியம்மாள் தோப்பு என்ற முகவரியில் வசித்த சக்திவேல் மகன் ரங்கசாமி என் கணவர் ஆவார். என் கணவர் பாக்கு மட்டையில் தட்டு செய்யும் தொழில் செய்தார். என் கணவர் தொழில் செய்த இடம் வேட்டமங்களம் மேற்கு கிராமம், அ.பு.ச.245-ல் கட்டுப்பட்ட 3 மனைகளில் அமைந்துள்ளது. ரங்கசாமியின் மனைவி தான் நீங்கள். 2ம் பிரதிவாதி என் மகன், 3ம் பிரதிவாதி என் கணவரின் தாயார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதியிடமிருந்து எங்கள் மூவருக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது. **அந்த வழக்கறிஞர் அறிவிப்பு இதுதான். அது வா.சா.ஆ.2 ஆகும்.** வழக்கறிஞர் அறிவிப்பு வந்தபிறகும், நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்த பிறகும் வாதி ரமேஷ்-ன் வசதி வாய்ப்பு மற்றும் வருமானங்களை கேட்டு தெரிந்துகொண்டீர்களா என்றால் வாதி யாரென்று தெரியாது அதனால் கேட்டு தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. நீங்கள் சொல்வது தவறு என்றும் வாதி உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் நேரடியாக தெரியும் என்று சொன்னால் சரியல்ல. வாதி யாரென்று தெரியாது என்று உங்கள் எதிர்வழக்குரையிலும் பிரமாணவாக்குமூலத்திலும் சொல்லாமல் தற்போது யாரென்று தெரியாது என்று வழக்கை மேம்படுத்துவதற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. என் கணவருக்கு உடன் பிறந்த சகோதரர் உள்ளார். வாதி ரமேஷ்-க்கு எதிராக இன்று வரை ஏதாவது சட்ட நடிவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. என் கணவர் இறக்கும்போது அவருக்கு 51 வயது. என் கணவருடைய மரணம் இயற்கையானது அல்ல அவர் கொலை செய்யப்பட்டார். நான் வழக்கு புரோநோட்டை இன்று வரை

பார்க்கவில்லை. உங்கள் கணவர் கிரையம் பெற்ற 3 கிரையப்பத்திரங்களில் உள்ள உங்கள் கணவரின் கைரேகைகளையும், வழக்கு புரோநோட்டில் உள்ள கைரேகையையும் ஒப்பீடு செய்ய மனுதாக்கல் செய்து அம்மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று சொன்னால் சரிதான். அந்த மனுவின் உத்தரவின் அடிப்படையில் உங்கள் கணவர் கிரையம் பெற்ற 3 கிரையப்பத்திரங்களில் உள்ள உங்கள் கணவரின் கைரேகைகளையும், வழக்கு புரோநோட்டில் உள்ள கைரேகையையும் ஒப்பீடு செய்து இரண்டு கைரேகைகளும் இறந்துபோன ரங்கசாமியின் கைரேகை ஒன்று தான் என்று அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். உங்கள் கணவரின் சகோதரரின் தூண்டுதலின் பேரில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதற்காக உங்கள் கணவரின் சகோதரர் மீது இன்று வரை நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 வழக்கு புரோநோட்டில் உள்ளது இறந்துபோன ரங்கசாமியின் கையொப்பங்கள் இல்லை என்று நீங்கள் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள், 2, 3 பிரதிவாதிகள் அடங்கிய கூட்டுக்குடும்பத்திற்காகத்தான் வாதி ரமேஷ்யிடமிருந்து வா.சா.ஆ.1 புரோநோட் மூலம் உங்கள் கணவர் கடன் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 புரோநோட்டில் காணப்பட்டுள்ள சாட்சி வா.சா.2, மற்றும் எழுதியதும் சாட்சியுமான திருமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் உங்கள் கணவர் ரங்கசாமி வாதியிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு கையெழுத்தும், கைரேகையும் வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு கடனை ஏமாற்றுவதற்காக பொய்யான விவரங்களுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்து அதை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு புரோநோட் அடிப்படையில் வாதியிடமிருந்து உங்கள் கணவர் பெற்ற கடன் தொகையை பிரதிவாதிகளான நீங்கள் மூவரும் பலன்

அடைந்துள்ளதால் வாரிசுகளான நீங்கள் அடைந்து அனுபவித்து வருவதாலும் வழக்கு கடனை செலுத்த கடமைப்பட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவர் கடன் பெற்றது உண்மை என்பதாலும், அதன் மூலம் பலன் அடைந்தது உண்மைஎன்பதாலும் 3ம் பிரதிவாதி இவ்வழக்கில் கட்சி நடத்தாமல் தோன்றாதரப்பினராக உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.12 17:28:01 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.